"அகாமுதலவெழுத்தெல்லாம் ஆதி
பகவன்முதற்றேயுலகு"

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

Registered at the G.P.O.

# சுதேசநாட்டியம்.

## THE JAFFNA NATIVE OPINION.

"யதார்த்தவாதி
வெகுஜன விரோதி"

மாசமிருமுறை பகிரங்கஞ் செய்யப்படும்

தருமமே செய்ம்
சத்தியமே நித்தியம்

மலர் 37 } யாழ்ப்பாணம் வயாவிளான், வெகுதானியஹு கார்த்திகைமீ ௩௦-ந் உ (15-12-38) வியாழக்கிழமை { இதழ் 5

### தோத்திரம்

எண்ணுகின்றேன் எண்ணங்க ளெல்லாந் தருகின்றான்
உண்ணுகின்றேன் உண்ணவுண்ண வூட்டுகின்றான்—நண்ணுதிருச்
சிற்றம் பலத்தே திருநடஞ்செய் கின்றானென்
குற்றம் பலபொறுத்துக் கொண்டு.

இராமலிங்கசுவாமிகள்

## வடமாகாணத்துள்ள
# சில இடப்பெயர்களின் வரலாறு.

திரு. ச. குமாரசுவாமிப்பிள்ளை

உரிமைபதிவு

(முன்தொடர்ச்சி)

தேரியத்தனை [சங்கானை] தேரி-துறவிப்பெண். | முகுந்தந்தனை [தனக்காரக்குறிச்சி] முகுந்த-விஷ்ணு. முகுந்தக-வெங்காயம்.

வாரியத்தனை [கரவெட்டி] வரியார்-அம்பலவாசிகளைச்சேர்ந்தவரும் கோயிற்றொழும்புசெய்பவருமான ஒருசாதியார். அவர்கட்கு மலையாளமே சுதேசம். வடமேற்கு மாகாணத்திலுள்ள வாரியப்போல என்னுங் கிராமப் பெயரையும் வடஅளவெட்டியிலுள்ள வாரியாமூலை என்னுங் குறிச்சிப்பெயரையும் நோக்குக.

மலயத்தனை [காரணவாய்] மலயா } மலயு } ஒருமரம்.
மலய-இந்திரன்தோட்டம்.

மலையர்-மலையாளத்தைச்சேர்ந்த ஒருசாதியார் ஆனைபிடிப்பதே அச்சாதித் தொழிலாம்.

நிச்சயந்தனை [சங்கானை] நிச்சய-கூட்டம், சங்கம்.

கித்துவந்தனை [புத்தூர்] கித்தவ-ஊமத்தை. | சுரவத்தனை [கட்டுவன்] சுவரு-தட்டான்.

குறும்பத்தனை [மாகையப்பிட்டி] குறும்பர்; குறுநிலமன்னர். திராவிடதேயத்துப் பழங்குடிகளுட் குறும்பரே அதிபுராதனமுடையோராம். 'குறும்பநாடு' எனப்பெயரிய ஓரூர் கோழிக்கூட்டுக்குக் கிழக்கேயுள்ளது. குறும்பருள்ளே நாட்டுக்குறும்பு, காட்டுக்குறும்பு என இருவகுப்புண்டு. இக் குறும்புமக்கள் தம் பெருந்தசையை இழந்தவராய் இடைத்தொழிலை மேற்கொண்டமையின் குறும்ப இடையரெனவும்படுவர். இழிகுலத்தோரென்று இகழப்படுதற்குமாளானர். வன்னியப்பட்டமுடைய பள்ளிச்சாதியின் ஒரு பகுப்பினராய் மதிக்கப்படும் குறும்பவன்னியரும் இக்குறும்ப வம்சத்தவரேயாம்.

குரும்பயிட்டி, குரும்பயப்புலம் முதலிய இடப்பெயர்கள் குறும்பர் அவ்விடங்களிலே குடியிருந்தமையைக் குறிப்பனபோலும். சிங்கள மாகாணங்களிலும்பண்டைக்காலத்திலேகுறும்பர் குடிகொண்டிருந்தாரென வெண்ணுவதற்கு இடமுண்டு. கேகாலையிலேயுள்ள 'குறும்பபீட்டிய'எனப் பெயரிய கிராமம் முன்னாளிலே குறும்பர் குடியிருந்தவிடமேபோலும், குறும்பர் கரையார், கள்ளர், குறவர், வன்னியர், பள்ளர், பணிக்கர், நாயர், பரவர், பல்லவர், பரணர், மல்லர், [மள்ளர்] மறவர், மலையர், சாலியர், சாணர், கோனர், [இடையர்] இராயர், ஒளியர், ஒட்டர், அகம்படியார், எனப்பெயரிய திராவிடக்குடிகள் பல இற்றைக்குப் பல்லாயிரமாண்டுகட்கு முன்னர் இலங்கைத்தீவின்கண்ணே பரவியிருந்தனரென்பதை அவ்வக்குடிகளின் பெயராலே ஆங்காங்கு விளங்கும் இடப்பெயர்களும் குடும்பப்பெயர்களும் அத்தாக்ஷிப்படுத்துவனவாமே. இப்பழங்குடிகளைச் சேர்ந்தோர் பலர் தம் சுயமொழியையொழித்துச் சிங்களமொழியை வழங்கிவந்தமையின், அன்னவர் சந்ததியார் 'சிங்களர்' என்னும் மக்கட்பிரிவிலே மறைந்தவராய்த் தம் மரபையுமிழந்துவிட்டனராம்.

### வத்த.

சூராவத்தை-இப்பெயர் சிங்களத்திலே 'சூரவத்த' எனவேனும், சூராவத்த எனவேனும் இருந்திருத்தல்வேண்டும். சூர-சூரன், சிங்கம்.காடி, வத்த- தோட்டம், சூரா-ஒருவன்பெயர்.

சூராவத்தை வலிகாமம் வடக்கிலேயுள்ள ஒரு சிற்றூர்க்கும் காரணவாயைச்சேர்ந்த ஒரு காணிக்கும் வழங்கப்படும் பெயராம்.

யாழ்ப்பாணத்திலே 'வத்தை' என்னும் முடிபுடைய இடப்பெயர்கள் மிகப்பலவாம். அவற்றுட் சிலவற்றை ஈங்குத்தருவாம்.

சித்தாவத்தை [உடுவில்] — சித்தா-ஓரிழிகுலச்சிங்களன்பெயர்

சாத்தனுவத்தை- [தெல்லிப்பழை] சங்கானை — சாத்தனு, ஹாத்தனு } — மேற்படி

கிரியவத்தை- [பழைவீமன்காமம்] — கிறியா — மேற்படி

சாத்தியவத்தை- [வட்டுக்கோட்டை] — சாத்தியா — மேற்படி

மூளாய் பிளவத்தை- [வட்டுக்கோட்டை] — பீலா — மேற்படி

கிராவத்தை- [மானிப்பாய்] — கிரா — மேற்படி

காரணவாய் இந்தாவத்தை- மூளாய் — ஹிந்தா-ஒருசிங்களன்பெயர்.

கறுப்பாலவத்தை [சுளிபுரம்] — கறுப்பலாகே- "கறுப்ப" எனப்பெயரிய சிங்களனுடைய.

வண்டாவத்தை [சில்லாலை] — வண்ட—கண்டிநாட்டு உயர்குலச் சிங்களன்பெயர் அரசகுமாரன், பிரதானிமகன்.

பண்டையாவத்தை [அராலி] — பண்டயா—ஒருசிங்களன்பெயர், வண்டியன்.

பண்டாவத்தை— [வாத்துப்பழை] — பண்டா-கண்டிநாட்டு உயர்குலச்சிங்களன் பெயர், அரசகுமாரன், பிரதானிமகன்.

வயிராவத்தை [காரணவாய்] — வயிரா-ஓரிழிந்தசாதிச்சிங்களன்பெயர், வயிரவாயா-வயிரவன்.

தம்பாவத்தை- [புலோலி] — தம்பா — மேற்படி

அவலியவத்தை [தெல்லிப்பழை] — அவலியா — மேற்படி

வன்னிங்கவத்தை- — வன்னிங்க-வன்னியன். (புலோலி)

தென்னிங்கவத்தை — தென்னிங்க-ஒருசிங்களன்பெயர்.

சாத்தாவத்தை [புலோலி] — சாத்தா- — மேற்படி

(தொடரும்)

தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு மேதப்பா டஞ்சு பவர்.



துதி வெண்பா

ஞானஞ் சுசுதியம் நல்லாயுள் தாவயவை
ஆனைமுக வாகுமரா ஆறுமுகா-ஆனந்தப்
பேர்க்குமர னச்சியந்த்ரம் பீடுபெற்றுசிற்
சீர்த்தியுடன்வந்து செகம். [கவெற்குச்

## சுதேச நாட்டியம்

யாழ்ப்பாணம், வயாவிளான்
வெகுதானியஞு கார்த்திகைமீ சுடு-வ

## துஷ்டநிக்கிரக சங்கம்

நமது யாழ்ப்பாணத்தின்கண்ணே இதுகாலை நடைபெற்றுவரும் கொடிய களவுகளையும், கொலைகளையும், கொள்ளைகளையும் கண்டு ஒவ்வோரு ஊராரும் ஆங்காங்கு தத்தம் ஊர்களைக் கள்வரினின்றும் பாதுகாத்தற்பொருட்டுத் துஷ்டநிக்கிரக சங்கங்கள் நிறுவிவருகின்றார்கள். இதுகுறித்து நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். "ஒன்றுபட்டா லுண்டுவாழ்வு" என வீரக்கவிஞன் சுப்பிரமணியபாரதியவர்கள் திருவாய்மலர்ந்தருளியவண்ணம் நாட்டுமக்கள் ஒன்றுகூடிக் கருமமாற்றுவாராயின் நாடு கள்வர்பயத்தினின்றும் விடுதலையடையுமென்பது திண்ணமாகும். சுதந்திரவுணர்ச்சிமிக்க இந்த இருபதாம்நூற்றாண்டில் கள்வர்கூட்டம் நமது யாழ்ப்பாணநாட்டை அலைப்பதென்றால் அதனை உணர்ச்சியுள்ள யாழ்ப்பாணத்தவன் எவனுவது பார்த்துக்கொண்டு சும்மாவிருக்கமுடியுமா? இந்த ஒரு உணர்ச்சியே நமது யாழ்ப்பாணத்து மக்களைத் தட்டியெழுப்பிவிட்டது. ஒன்றில், கள்வரின் கொட்டத்தை அடக்குகின்றோம், அல்லது எமது உயிரையே தேசத்துக்காகத் தியாகஞ்செய்கின்றோம் என்று உணர்ச்சிமிக்க வாலிபர்கள் வீரமுழக்கம்செய்துகொண்டு துஷ்டநிக்கிரக சங்கங்களைநிறுவி அதன்மூலம் நாட்டுக்குப் பெரும் நன்மை செய்து வருகின்றார்கள். இப்பொழுது இராக்காலங்களில் ஒவ்வொரு சந்தியிலும் வாலிபர்கள் கூடிநின்று தத்தம் ஊரைக் காவல்புரிகின்ற காட்சி மிகவும் மெச்சத்தகுந்ததேயாகும். தங்கள் தேகசுகத்தையும் பாராது நித்திரையின்றி, அலுப்பின்றி இவர்கள் செய்யும் தொண்டுக்கு "வையகமும் வானகமு மாற்றலரிது" இந்த வாலிபர்கள் காலத்தினாற்செய்யும் இவ்வுதவி "ஞாலத்தினும் மாணப்பெரிது" என்பது எவர்களாலும் மறுக்கமுடியாத பேருண்மையாகும்.

வாலிபர்களின் இங்ஙன்முயற்சிக்குச் செல்வர்களாயுள்ளோர் பொருளுதவிசெய்ய முன்வந்து அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். கள்வரைப் பிடித்துக்கொள்ளும் வாலிபருக்குப் பணக்காரர் பொற்கிழி கொடுக்க முன்வரல் வேண்டும். யாழ்ப்பாணத்திலுள்ள எந்தப் பிரபு இப்படிச்செய்ய முன்வருவாரென்பதையே நாம் பெரிதும் எதிர்பார்க்கின்றோம். தங்களுயிரையும் பொருட்படுத்தாது தேசவிடுதலை ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு உண்மைத் தொண்டு புரியும் உத்தம வாலிபருக்குப் பொற்கிழிகொடுத்துச் சன்மானஞ் செய்யச் செல்வச்சீமான்கள் முன்வராராயின் அத்தகையினருடைய செல்வம் "ஈயார்தேட்டைத் தீயார் கொள்வர்" என்ற முதுரைப்படி கள்வர்கையி லகப்படுவது சாலவுந் தகுதியென்றே நாம் பன்முறை கூறுவேம்.

"உடாதுமுண்ணுதும் தம்முடம்பு செற்றும்
கொடாதநல்லறமுஞ்செய்யாது
வைத்தீட்டினரிழப்பர் வான்றோய்
உய்த்தீட்டுந் தேனிக்கரி" (மலைநாட

எனவருஞ் சமணமுனிவர் திருவாக்கை நமது யாழ்ப்பாணத்துச் செல்வந்தர்களுக்கு நாம் ஞாபகமூட்ட விரும்புகின்றேம். ஆகையினுல் செல்வந்தர்களே! பெட்டியிற் பூட்டி வைத்திருக்கும் பணக்கட்டுகளை அவிழ்த்தெடுங்கள்! கள்வர் பயத்தினின்றும் நாட்டினைப் பாதுகாக்கும் வாலிடர்களுக்குத் தாராளமாகப் பணமுதவுங்கள்!!

இனி நமது வாலிபத் தொண்டர்களுக்கும் சில கூறுவாம். "தொண்டர்களே! உங்கள் தொண்டு மிகவும் புனிதமானது; பொறுப்புள்ளது; இத்தகைய தொண்டை நீங்கள் மேற்கொண்டது குறித்து நாட்டுமக்களுக்காக நாம் நன்றிகூறுகின்றேம். இத்தொண்டை இடைவிடாது புரிவீராக. நற்குணமும், நற்சிந்தையும், உண்மைத் தேசாபிமானமும், தியாகபுத்தியும், வீர உணர்ச்சியும், சுதந்திரவேட்கையும், அஞ்சாநெஞ்சமும்உடைய வாலிபர்களையே உங்கள் தொண்டர்படையிற் சேர்த்துக்கொள்ளுங்கள். நெல்லினுட் பதரன்னுரை உங்கள் சூழாத்தினின்றும் விலக்கிவிடுங்கள். எல்லாம் வல்ல இறைவன் உங்களைக் காப்பாற்றுவாராக. இனி, பொலிஸ் பகுதியினரும் இவ்வாலிபர்களோடு ஒத்துழைக்கவேண்டுமென்று விரும்புகின்றேம். வாலிபரின் துஷ்டநிக்கிரக இயக்கத்துக்குப் பொலிஸ்படையினரின் உதவியும் இன்றியமையாது வேண்டப்படுவ தொன்றாகும். இங்ஙனம் செய்யின் பொலிசார்மீது நாட்டவர்கூறும் பழிமொழியகன்றுவிடும். தலைமைக்காரருடைய ஒத்துழைப்பும் அவசியம் வேண்டப்படுவதொன்றாகும். கூலிக்குமாரடியாது தங்கள் கடமையைத் தலைமைக்காரர்கள் நேர்மையாகச் செய்வார்களாக. வாலிபத்தொண்டர், பொலிஸ்பகுதியினர், தலைமைக்காரர் என்ற முப்பகுதியினரும் ஒன்றுபட்டு உறுதியோடும் ஊக்கத்தோடும் செயல் ஆற்றுவாராயின் நமது யாழ்ப்பாணநாடு பண்டுபோல சமாதான வாழ்வு நடாத்துமென்பதில் எட்டுணையும் ஐயமின்று.

### காலநிலை

தற்போது சிறுமழை வருஷித்து வருகிறது. இவ்வருடம் மழை பிந்தியமையால், புல் பூண்டு முதலியன தங்கள் வளர்ச்சியில் விருத்தியடையவில்லை. இதனுல் மாடு ஆடுகளின் உணவுக்குத் தட்டுப்பாடேற்பட்டிருப்பது கமக்காரருக்குக் கஷ்டமாக முடிந்திருக்கிறது.

---

### கள்வர்க்கு மறியல்

சில மாசங்களுக்கு முன் எங்களுனைச் சேர்ந்ததாய்ப் பலாலி இலகையிலுள்ள ஆறுமுகம் என்பவரின் வீட்டுட்புகுந்து பெட்டியுள் வைக்கப்பட்ட தாலிக்கொடி, காப்பு முதலியவற்றைத் திருடிய பலாலி ப. சின்னட்டியன், வல்லுவெட்டி வயிரமுத்தன் என்னும் இருவருக்கும் சென்ற 9-ந் திகதி பெரியகோட்டில் தனித்தனி இரண்டுவருட மறியற்றீர்ப்புக் கிடைத்ததாக அறிகின்றேம். இவர்கள் முன்னும் இப்படியான களவுகளிற் சம்பந்தப்பட்டுத் தப்பித்திரிந்தார்களென்றும், ஊழின் வலியால் இந்தக் களவில் அகப்பட்டமை தெய்வசங்கற்பமென்றும் பலர்பேசிக் கொள்ளுகிறுர்கள்.

### மந்திரிமார் இராசிநாமாச்செய்வாரா?

பிறேஸ்கேடில் விசாரணைக் கொம்மிஷனரின் அறிக்கை சம்பந்தமாய் அரசாங்கசபையிலே இரு பிரேரணைகள் அரங்கேறியுள்ளன: அவற்றுள் ஒன்று, உள்நாட்டு மந்திரியாராகிய சேர் பரன் ஜயதிலக அவர்களில் நம்பிக்கைப் பிரேரணை. இது சிலவாரங்களின் முன்னர் சபையில் அரங்கேறலாயிற்று. அதன்மேல் சென்றவாரம் கொம்மிஷனரின் அறிக்கையைக் கண்டனஞ்செய்து நிராகரிக்கும் மற்ருேர் பிரேரணை அரங்கேற்றப்படலாயிற்று. இந்த இரு பிரேரணைகளும் சபையில் அரங்கேறியவிடத்தும் உள்நாட்டு மந்திரியார் தம்பதவியை இராசிநாமாச் செய்யவிருக்கின்றுராம். வருகிற செவ்வாய்க்கிழமை அரசாங்கசபையிலே அவர் தாமே சில விஷயங்களை நேர்முகமாகத் தெரிவித்துவிட்டுத் தமது இராசிநாமாப் பத்திரத்தைத் தேசாதிபதிக்குச் சமர்ப்பிப்பாராம். அவர் தம்பதவியை விட்டு நீங்குமிடத்து ஏனைய மந்திரிமார் அவரைப்போல் நடந்துகொள்வதா இல்லையா வென்பதையிட்டே தற்போது ஆலோசனை நடந்துவருகிறது.

### உயரிய தீப ஸ்தம்பம்

உலகிலேயே மிக உயர்ந்த தீபஸ்தம்பம் டாஸ்மானியாவுக்கு அப்பாலிருக்கும் டீல் தீவில் நிற்கிறது. கடல் மட்டத்துக்குமேல் 957 அடி உயரம், இதிலிருக்கும் விளக்கு பத்துலட்சம் காண்டில்பவர் பிரகாசமுடையது.

### சுயபாஷா பாடசாலைகள்

ஆகாய வசனி சுயபாஷா பாடசாலைகளுக்கும் உபயோகமாகும் வண்ணம், வருகிற வருஷம் மேற்படி பாடசாலைகளுக்கு விநியோகஞ் செய்வதற்காகச் சமீபத்தில் 25 புதிய "றேடியோ செற்" யந்திரங்கள் லண்டனில் இருந்து வந்து சேரும்.

பாடசாலை ஆகாயவசனிச் செய்திகளைக் கேட்டின்புறும் பாடசாலைகள் இப்பொழுது ஏறக்குறைய 50 வரையிலிருக்கும். இன்னும் 25 பாடசாலைகளுக்கு இவ்வசதியேற்படுவது விரும்பத்தக்கதே. இலங்கையிலுள்ள "ஒவ்வொரு பாடசாலையும் ஒவ்வொரு "றேடியோ செற்"றை வைத்திருப்பதற்குப் பலகாலஞ் செல்லும்.

பாடசாலைகளுக்குரிய ஆகாயவசனிச் செய்திகளை மிகவும் விரும்பத்தக்கவையாகவும், கலைவளர்ச்சிக்கு அதிக பயனுள்ளவையாகவும் செய்வதற்கு ஆலோசிக்கப்படுகின்றது.

### சீமெந்துச் செய்கை

இலங்கையிலே சீமேந்து செய்வதற்கான திட்டமொன்றை ஒப்புக்கொண்டு இயன்றளவு விரைவிலே சீமேந்துசெய்யத் தொழில் கைத்தொழில் வர்த்தக நிர்வாக மந்திரி சபை ஆத்திரப்படுகின்றது. இதற்கிடையில், இலங்கை வர்த்தகர் ஒருவர் யாழ்ப்பாணத்திலே சீமேந்துத் தொழிற்சாலை ஸ்தாபிக்க கருத்துடையவராய் அரசினரிடம் சில சகாயங்களை வேண்டி நிற்கின்றார். அவர் இலங்கையிலே சீமேந்து செய்து வியாபாரம் நடத்துதற்கென்று தமக்கே ஏகசுதந்திரம் அருளப்படவேண்டுமென்றும், பிறதேசங்களிலிருந்து றெயில்வே மூலமாகச் சீமெந்தை ஏற்றியிறக்கக் குறைந்த சலார்விதம் குறிக்கப்பட வேண்டுமென்றும், பிறதேசங்களிலிருந்து இறக்குமதியாகும் சீமேந்துக்குக் கூடிய தீர்வை விதிக்கவேண்டுமென்றும் மனுப்பண்ணியிருக்கின்றார். இன்னும் அரசினர் தமக்குத் தேவைப்படும் சீமெந்தில் அரைவாசியைத் தம்மிடமே வாங்குவதாக உத்தரவாதஞ் செய்யவேண்டுமென்றும் கேட்டிருக்கின்றார். இவைகள் சம்பந்தமாய்த் தொழில் கைத்தொழில் வர்த்தக நிர்வாக மந்திரி சபை கூடி ஆலோசிக்கவிருக்கிறது.

### இமயமலையில் 350 வயதுள்ள சாது

எஹிப்திய ராஜவம்சத்தைச் சேர்ந்த சாது ஒருவர் இமயமலையிலிருப்பதாகவும், அவருக்கு இப்பொழுது 350 வயதென்றுங் கூறப்படுகின்றது. இத்தகைய ஆச்சரியகரமான செய்தியை வெளியிட்டவர் சாது தேவசகாயமென்பவர் என அறிகிறேம்.

தேவசகாயம், தாமும் மேற்படி சாதுவின் சிஷ்யென்றும், பஞ்சாப்பைச்சேர்ந்த சாது சுந்தர் சிங்கும் தம்மைப் போன்றவரே என்றும், வேறு ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, கனடா முதலிய தேசங்களைச்சேர்ந்த அநேகம் கிறிஸ்தவ சாதுக்களுக்கும் மேற்படி சாதுவே குருவாக இருக்கிறுரெனவுங் கூறினர்.

மனுஷ சக்திக்கப்பாற்பட்ட விசேஷங்களைச் செய்யுஞ் சக்தி சாதுவுக்குண்டென்றுஞ் சாது தேவசகாயங் குறிப்பிட்டார்.

---

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப் பாத்திப் படுப்பதோ ராறு.

# கழனிநதி பிரவாகம் குறைந்துவிட்டது

## விடிழந்து தவிக்கும்சனங்களுக்கு உணவு விநியோகம்

### கஷ்ட நிவாரணத்திற்கு வர்த்தகர்களுதவி

### களுகங்கையிலும் மிகப்பெரிய பிரவாகம்

கழனியாற்றில், வெள்ளம் எவ்வளவு துரிதமாக ஏறிக்கொண்டுவந்ததோ அதேபோன்று இப்பொழுது அதி துரிதமாகக்குறைந்துகொண்டு வருகிறது. பெருமழை மீண்டும் ஆரம்பிக்காதிருந்தால் ஆற்றுவெள்ளம் 8 அடிக்குக் கீழ்இறங்கி மேலும் துரிதமாக வற்றிக்கொண்டு வந்துவிடுமென்றுஎதிர்பார்க்கப்படுகிறது

சென்ற 10-ந்திகதி வெள்ளப் பிரவாகம் துரிதமாக அதிகரித்து உச்சஸ்தானநிலையை நெருங்கிவிட்டது. அதனுல் மற்றும் பல பகுதிகள் வெள்ளத்தில்மூழ்கி இன்னும் ஏராளமான ஜனங்கள் வசிக்க விடின்றிப் பரிதவிக்க நேர்ந்தது. 11உ முதல் பிரவாகக்கொடுமைக்காளாகி அவதிப்படும்ஜனங்களுக்கு அரிசியும் மற்றும் உணவுப்பொருட்களும் சப்ளை செய்யப்படுகின்றன நகரில் மாத்திரமே சுமார் 500 அரிசி சப்ளை சீட்டுகள் வழங்கப்பட்டன. புறக்கோட்டை வர்த்தகர்கள், கஷ்டப்படும் ஜனங்களுக்கு உதவி செய்வதற்காக ஏராளமான அரிசி மூடைகளையும் மற்றும் உணவுப் பொருட்களையும் கொடுத்து உதவி செய்தனர்.

பலவிடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு முகாம்கள் தவிர, உருகொடவத்தையில் சுமார் 160 ரயில் வண்டிகளில், பிரவாக மேற்பட்டிருக்கும் ஸ்தலத்தைச்சேர்ந்த சனங்கள் தற்காலிகமாகத் தங்குவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உருகொடவத்தையிலுள்ள தெருக்களெல்லாம் வெள்ளத்தில் மூழ்கிக்கிடக்கின்றன. எங்கும் ஒரே ஜலப்பிரளயமாகவிருக்கிறது. இடையிடையே வீடுகளின் கூரைகள் வெள்ளக்காட்டின்மீது காணப்படுகின்றன. ரயில்பாதைக்கு ஆபத்துவந்துவிடுமோ வென்பதைப்பார்ப்பதற்காக ரயில்வே அதிகாரிகள் இப்பகுதிக்கு விஜயஞ்செய்தனர். அம்பத்தலன்பகாலே பகுதியில் சுமார் 3000 பேர்கள் பிரவாகக் கொடுமையால் வீடுகளை இழந்து அவதிப்படுகின்றனர். அவர்களில் பலர் வெள்ளம்பிட்டி பாடசாலையில் தங்கியிருக்கின்றனர். வெரகொடையில் மாத்திரமே ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக சுமார் 1700 பேர்கள் ரயில் வண்டிகளில் தற்காலிகமாக குடியேறியிருக்கின்றனர்.

கொலன்னுவையிலுள்ள வெள்ளப் பாதுகாப்பு அணை உடைத்துவிட்டதாகப் பரவியவோர் வதந்தி நகரில் மிகுந்த பரபரப்பை உண்டு பண்ணிவிட்டது. உண்மையில் இவ்வணையில் ஏற்பட்டிருந்த ஒழுக்குகள் மணல்மூடைகளால் அடைத்து தடுக்கப்பட்டிருந்தன.

#### அவதான நிலைய அறிக்கை

கொழும்பு அவதானநிலைய அதிகாரி கீழ்க்கண்டவோர் அறிக்கையை வெளியிட்டார்:—

12உ காலை 9-30 மணியோடு பூர்த்தியான கடந்த 24 மணி நேரத்தில் மிதமான மழைதான் சிலவிடங்களில் பெய்ததாக தகவல் கிடைத்திருக்கிறது. நாபொடையில் 92 அங்குலமும், எஹலியகொடையில் 72 அங்குலமும், லபுகாமையில் 41 அங்குலமும் மழைபெய்திருக்கிறது. எனவே, ஒரு அங்குலத்திற்கும் குறைவாகவே மேற்படி ஸ்தலங்களில் மழை பெய்திருக்கிறது. கழனிநதி உற்பத்தி ஸ்தானத்தில் மழை சிறிதளவே பெய்திருப்பதால் நதியில் வெள்ளம் வற்றிவருவதை இம்மழை பாதிக்காது.

#### களுகங்கையில் பெரிய பிரவாகம்

சென்ற 10உ களுத்துறை நகரிலிருந்து சுமார் 6 மைல் சுற்று வட்டாரத்திலுள்ள கிராமங்களிலெல்லாம் பெரிய பிரவாகமேற்பட்டு வீடுகள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. களுகங்கைநதியில் இப்பொழுது ஏற்பட்டிருப்பதைப் போன்ற அவ்வளவு பெரிய பிரவாகம் கடந்த 25 வருடங்களுக்கிடையில் ஏற்பட்டதில்லையென்றே சொல்லலாம். களுத்துறை உதவி சர்க்கார் ஏஜெண்டு பிரவாகமேற்பட்டிருக்கும் ஸ்தலங்களுக்கு விஜயஞ்செய்து நிலைமையை நேரில் பார்த்துவந்தார். கிராமப்பகுதிகளில் வெள்ளக்கஷ்ட நிவாரணவேலையை சர்க்கார் நடத்திவருகின்றனர். நாகொடையிலுள்ள விவாகப்பதிவு காரியாலயம் ஜலத்தில் மூழ்கிக் கிடக்கிறது.

#### பாணந்துறையிலும் வெள்ளக்கொடுமை

8-ந்திகதி முதல் நான்குதினங்களாக மழை இடைவிடாமல் பலமாகப் பெய்ததினுல் களுகங்கை நதியில் பெரிய பிரவாகமேற்பட்டு கரையோரக் கிராமங்களிலெல்லாம் வெள்ளம் புகுந்துவிட்டது. பொல்கொடை நதிக்கரையிலுள்ள கிரா

(தொடர்ச்சி 4-ம்பக்கம்பார்க்க)

## சைவத்தின் மேன்மை

### மேன்மைகொள் சைவ நீதி என்பதற்குக் காரணம்.

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்

இ-ள். உலகம் முழுவதும் ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற முகில்கள் தவறாது மழைபெய்குக, நிறைவான செல்வங்கள் பெருகுக, அரசன் செங்கோன் முறைப்படி அரசுபுரிகுக, ஆன்மாக்கள் எவ்வகையான முட்டுமில்லாமல் வாழுக, நான்கு வேதங்களிலும் சொல்லப்பட்டனவாகிய தருமங்கள் விருத்தியடைகுக, நல்ல தவங்களும் யாகங்களும் ஓங்குக, முதன்மையுடையதாகிய சைவசமயக் கோட்பாடுகள் விளக்கமுறுக எ-று.

'உலகமெல்லாம்'' என்பது கடைநிலைத்தீபகமாதலின் அதனை ஏனையவற்றோடுஞ்சேர்த்துப் பொருள்கொள்க இது வாழ்த்துக்கூறியவாறும். வழாதுபெய்தல்-மாசம் மும்மாரி தவறுதலின்றிப்பெய்தல்; குறைவான மழை வீழும்போது தூறுதல் எனவும், அதிக மழை வீழும்போது பொழிதலெனவும் தமிழுலகஞ் சொல்லுதல் வழக்காதலினுல், அற்பமழையும் அதிகமழையுமில்லாமல் காலமழை போதிய அளவு வீழ்தல்வேண்டுமென்னுங் குறிப்புத்தோன்ற 'பெய்க' எனக் கூறினர்போலும்.

மழை காலந்தவறாது பெய்தலினுல் நாட்டிலே வளம்பெருகும். வளம்பெருகவே அரசன் தன்நாட்டிற் பஞ்சம் பசியில்லாமற் குடிகளை நீதியாக ஆளுதல்கூடும். செங்கோன் மன்னனின் கீழுள்ள சனங்கட்கு அரசனாகிய தன்னாலும் தன் பரிசனராலும் பகைவராலும் கள்வராலும் வனவிலங்குகளாலும் ஆனபயம் ஐந்தும் பிணி வறுமை யென்னுமிவைகளு மில்லையாகும். எவ்வகையான குறைகளுமில்லாமற் சனங்கள் வாழும்போது அவர்கள் வைதிக தருமங்களையும் நல்ல தவம் ஜபம் ஓமகங்களையும் செய்தல் சாலும். இவைகளெல்லாம் இனிது விருத்தியாகவே இச் சற்சனர் அநுட்டிக்குஞ் சைவசமய ஆசாரங்கள் குறைதலின்றி எவர்மாட்டுஞ் செறிந்து விளங்கும். இனி உலகமெல்லாம் சைவநீதி விளங்குக என்பதற்கு உலகத்தின்கண்ணேயுள்ள மன்பதைகளெவராலும் சைவமார்க்கக் கொள்கைகள் விளங்கப்படுவனவாக என்னுங் கருத்துந் தொனிக்க வைத்தமை ஆசாரிய சுவாமிகளின் கவிநுட்பங்களுள் ஒன்றென்று கொள்ளலாமல்லவா?

இத் திருவிருத்தத்தின்கண்ணே வான்முகில் வழாதுபெய்தன் முதலியன ஒன்றிற்கொன்று காரணகாரியமாகநிற்றல் மேலே விளக்கப்பட்டது.

இந்த வாழ்த்துத் திருவிருத்தம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் திருவாய்மலர்ந்த:-

'வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே'

என்னுந் திருப்பாசுரத்தின் கருத்தினை அகத்துட்கொண்ட தென்பதை ஈண்டு ஆராய்வாம்:—

"வான்முகில் வழாது பெய்க'' என்றதனுல் ''வீழ்க தண்புனல்'' என்பதும், அந்தணர் யாகஞ்செய்வதற்கும் வானவர் ஆகுதிபெறுதற்கும் பஞ்சகௌவியத்தைப் பசுக்கள் பயப்பதற்கும் காரணம் தவறாது பெய்யும் மழையின் பயனுகவந்த மலிவளமேயாக, "மலிவளஞ்சுரக்க'' என்றதனுல் "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்'' என்பதும், "கோன்முறை யரசுசெய்க'' என்றதனுல் "வேந்தனுமோங்குக'' என்பதும், "குறைவிலாதுயிர்கள் வாழ்க'' என்றதனுல் "வையக மூந்துயர் தீர்கவே'' என்பதும், "நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க'' என்றதனுல் "வாழ்க அந்தணர்'' என்பதும், "மேன்மைகொள் சைவநீதி விளங்குக'' என்றதனுல் "அரனுமமே சூழ்க'' என்பதும், மேலே சொல்லப்பட்ட நன்மைகளெல்லாம் ஓங்குக எனவே தீமைகளெல்லாம் நீங்குக என்பது இவ்வாழ்த்தில் அருத்தா பத்தியாற் பெறக் கூறியதனுல் "ஆழ்க தீயதெல்லாம்'' என்பதும் பெறக்கிடத்தல் காண்க.

——— இ. ம்.

## சுதுமலை புவனேஸ்வரி அம்மன் கோவில் உற்சவம்

இக்கோவிலின் உற்சவம், மழை காரணத்தினுல் உண்டாகிய வெள்ளம் வற்றாததினுல், வழமைபோல நடக்கவேண்டிய காலத்தைத்தணந்து, வைகாசிமாதம் ருக-ந் திகதி புதன்கிழமை துவஜாரோகணமும் ஆனிமாதம் கரு-ந் திகதி வெள்ளிக்கிழமை ரதோற்சவமும், கஎ-ந் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறுமென அறிகின்றேம்.

## மகா சங்காபிஷேகமும் திருவிழாவும்

வயாவிளான் ஞானவயிரவர் சுவாமியின் பிரதிட்டைக் கும்பாபிஷேகம் முடிந்தபின்னர்- 40-ம் நாளாகும் 13-5-39 சனிக்கிழமை பகலும், இரவும் அப்பகுதியாரால் மேற்படி கொண்டாட்டங்கள் மிகவும் சிறப்புடன் நடத்தப்பட்டன. அத்தருணங்களில் சமயபக்தர்கள் பலர் சென்று சுவாமிதரிசனஞ் செய்து மகிழ்ந்தனர்.

## ஓர் ஐயவினு?

குருமார்களே!

ஸ்ரீ சக்கரம் அஃதாவது நாற்பத்துமூன்று கோணமிட்டு அட்சரமுமடைத்துள்ள யந்திரத்தை விக்கிரகத்தின் கீழ்வைத்துப் பிரதிஷ்டை பண்ணலாமா? அடைக்கும் அட்சரங்களும் இருக்கின்றனவோ என்பதை இப்பத்திரிகை வாயிலாகத் தெரிவிக்கும்படி கேட்கின்றேம்.

இங்ஙனம்
ஓர் சந்தேகி

# பிரிட்டன்மீது சோவியத் ருஷ்யாவின் சந்தேகம்

## தனியாக யுத்தத்தில் மாட்டிக் கொள்ள நேரிடுமோ?

### மாஸ்கோவின் தப்பபிப்பிராயம்

### பிரிட்டிஷ் அந்தரங்க சுத்திவிளக்கம்

ஆங்கிலோ—சோவியத் சமாசப்பேச்சுகளுக்குப் பலவிதமான சங்கடங்கள் எற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பிரிட்டிஷ் சர்க்காரின் ஆலோசனைகளை ஒப்புக்கொண்டதால், பிரிட்டனும் பிரான்சும் உதவிக்கு வராமலேயே ருஷ்யா யுத்தத்தில் இறங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுமோவென்று சோவியத் சர்க்கார் சந்தேகப்படுகிறார்கள். அத்தகைய சந்தேகத்திற்கு இடமில்லையென்றும், சோவியத் ருஷ்யா தாக்கப்பட்டால் பிரிட்டனும் பிரான்சும் உதவிசெய்வதாக உறுதிகூற முடியுமென்றும் காமன்ஸில் திரு. சேம்பர்லேன் அறிவித்தார். சோவியத் சர்க்காரின் ஆலோசனைகள் மிகவும் கடுமையாயிருப்பதால், அவற்றை ஒப்புக்கொண்டால் சமாதான நோக்கத்திற்கு இடையூறு ஏற்படுமென்று பிரிட்டிஷ் சர்க்கார் அபிப்பிராயப் படுவதாகத் திரு. சேம்பர்லேன் கூறினார். சோவியத் சர்க்காரின் சந்தேகத்தைத் தீர்க்கப் பிரிட்டிஷ் சர்க்கார் தயாராயிருக்கிறார்கள் ருஷ்யாவின் சுயேச்சையையும் ருஷ்யாவின் அண்டைநாடுகளாகிய லித்வியா, எஸ்தோனியா இவற்றின் சுயேச்சையையும் பாதுகாப்பதாகப் பிரிட்டனும் பிரான்சும் உறுதிகூறினால் சோவியத்சர்க்கார் ஆங்கிலோ--பிரெஞ்சு ஆலோசனைகளை ஒப்புக் கொள்வார்களென்று கூறப்படுகிறது.

சோவியத் சர்க்கார் ஆங்கிலோ--சோவியத் கோரிக்கைகளை கீழ்க்கண்ட இரு நிபந்தனைகளுடன் ஒப்புக்கொள்வார்களென்று நம்பப்படுவதாக ஓர் ராஜீய நிருபர் எழுதுகிறார்:—

1. பிரிட்டனும் பிரான்சும் சோவியத் ருஷ்யாவின் சுயேச்சையைப் பாதுகாக்கவேண்டும்.

2. ஏற்கனவே சோவியத் பாதுகாப்பைப் பெற்றிருக்கும் ருஷ்யாவின் எல்லைப்புறத்திலுள்ள எஸ்தோனியா, லத்வியா இவ்விரு நாடுகளுக்கும் பிரிட்டனும் பிரான்சும் பாதுகாப்பு உறுதிமொழி கூறவேண்டும்.

## ருஷ்யாவின் நிபந்தனைகள்

பெல்ஜியம், ஹாலந்து, ஸ்விட்ஜர்லந்து, கிரீஸ், இங்கிலாந்து, பிரான்ஸ், போலந்து, ருமேனியா முதலிய நாடுகளில் ஏதேனும் ஒன்று தாக்கப்பட்டால் சோவியத் ருஷ்யாவுடன் ஜெர்மனிமீது போர்தொடுக்கவேண்டுமென்று கேட்கப்படுவதாகவும், ஆகவே ருஷ்யாவின் சுயேச்சைக்கு அரண்களைப்போன்றிருக்கும் அண்டை நாடுகளுக்குப் பாதுகாப்பளிக்கவேண்டிய தவசியமென்றும் சோவியத் ராஜ தந்திரிகள் அபிப்பிராயப்படுவதாகத் தெக்கிறது. இங்கிலாந்துக்கும் போலந்துக்குமிடையே ஏற்படப்போகும் ஒப்பந்தத்தையும், போலந்துக்கும் ருமேனியாவுக்குமிடையே நீண்ட காலமாயுள்ள ஒப்பந்தத்தையும் மாற்றுமாறு சோவியத் சர்க்கார் வற்புறுத்திக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஏனெனில் பிரஸ்தாப ஒப்பந்தங்கள் சோவியத் ருஷ்யாவுக்கு விரோதமாகப் பிரயோகிக்கப்படுமோவென்று சோவியத் சர்க்கார் பயப்படுவதாகத் தெரிகிறது. போலந்து--ருமேனியா ஒப்பந்தம் ஆரம்பத்திலிருந்தே ருஷ்யாவுக்கு விரோதமாக உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறதென்பதை இங்கு குறிப்பிடவேண்டியதவசியம்.

## தூரதிசைக் கீழ்நாடுகள்

ஆங்கிலோ--சோவியத் சம்பாஷணைகள் மேல்நாடுகளைப்பற்றி மாத்திரமே நடைபெறுவதாகப் பொதுவாக அபிப்பிராயம் இருந்துவருகிறது. ஐரோப்பா மாத்திரமன்றியில் சில சந்தர்ப்பங்களில் தூரதிசைக் கீழ்நாடுகள் சம்பந்தமாகவும் பரஸ்பர உதவி ஒப்பந்தம் செய்துகொள்ளும் பொருட்டு உடன் சமரசப் பேச்சுக்களைத் துவங்கவேண்டுமென்று சோவியத் சர்க்கார் கூறுவதாகப் பாரிஸில் விஷயம் தெரிந்தவர்கள் கூறுகின்றார்கள். போலந்தும், ருமேனியாவும் தங்களுடைய பிராந்தியங்கள் வழியாகச் சோவியத் துருப்புகள் செல்ல ஆக்ஷேபித்து ஒப்பந்தம் ஏற்பட முடியாமல் போய்விட்டால், சோவியத் ருஷ்யா யுத்தகாலத்தில் ஜனநாயக நாடுகளுக்கும் அவற்றிற்கு உதவிபுரியும் நாடுகளுக்கும் ஆயுதங்களையும் மூலப் பொருட்களையும் கொடுத்துதவத் தயாராயிருப்பதாகக் கூறப்படுகிறது.

## காமன்ஸில் சேம்பர்லேன் அறிக்கை

காமன்ஸ்சபை கூடியதும் நேற்றிரவில் மாஸ்கோவில் வெளியிடப்பட்ட அறிக்கையைப்பற்றி திரு. அட்லி கேள்வி கேட்டார். திரு. சேம்பர்லேன் பின்வருமாறு பதில் கூறினார்:—

“திரு. அட்லி கூறும் அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். பிரிட்டிஷ் சர்க்கார் தெரிவித்துள்ள கோரிக்கைகளைப்பற்றி தப்பபிப்பிராயத்துடன் மேற்கூறிய அறிக்கை வெளியிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது ஆங்கிலோ--சோவியத் சமரசப் பேச்சுகள் இன்னம் நடந்துகொண்டிருப்பதால் நான் சவிஸ்தாரமாக ஒன்றும் கூறமுடியாத நிலைமையிலிருக்கிறேன். எனினும் மேற்கூறியவாறு அறிக்கை வெளியிடப்பட்டுவிட்டதால் சமரஸப் பேச்சுக்களின் கருத்தை அறிவிக்க வேண்டியவனாயிருக்கின்றேன். சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் பிரிட்டன் பாதுகாப்பு உறுதிமொழி கொடுத்திருப்பதை இச் சபை நன்கு அறியும். பலாத்காரம் செய்யப்படும் நாடுகளுக்கு ஓரே நோக்கத்தால் தூண்டப்பட்டுத்தான் பிரிட்டன் பாதுகாப்பு உறுதிமொழியை அளித்திருக்கிறது. சோவியத் சர்க்காரைக் கலந்துகொள்ளாமலேயே பிரிட்டிஷ் சர்க்கார் இந்த உறுதிமொழிகளைக் கொடுத்தார்கள். இதேபோல் உறுதி மொழிகளைக் கொடுக்குமாறு சோவியத் சர்க்காரையும் பிரிட்டிஷ் சர்க்கார் கேட்கவில்லை. இப்படி ஆலோசனை கூறுவதால் பலவிதமான சங்கடங்கள் ஏற்படும். பாதுகாப்பு உறுதிமொழிகளை நிறைவேற்றும் பொருட்டுப் பிரிட்டனும் பிரான்சும் யுத்தம் செய்ய நேர்ந்தால், சோவியத் ருஷ்யாவும் உதவிசெய்யத் தயாராயிருப்பதாகப் பிரகடனம் செய்யுமாறு பிரிட்டிஸ் சர்க்கார் சோவியத் சர்க்காரைக் கேண்டுக்கொண்டார்கள். பலாத்காரம் செய்யப்படும் நாடுகள் தங்களுடைய சுயேச்சையைப் பாதுகாத்துக்கொள்ள விரும்பினால் அவற்றிற்குச் சோவியத் ருஷ்யா உதவிசெய்யத் தயாராயிருப்பதாகச் சமீபத்தில் ஸ்டாலின் அறிவித்தார். ஆகவே அவருடைய அறிவுப்புப்படி சோவியத் சர்க்கார் நடக்கலாம்.

## சோவியத் முட்டுக்கட்டை

சோவியத் சர்க்காருடன் தங்களுடைய ஆலோசனைகளைப் பிரிட்டிஷ சர்க்காருக்குத் தெரிவித்தார்கள். அவை மிகவும் கடுமையாயிருந்தன. எந்தத் தொல்லைகளை நீக்கும்பொருட்டு முயற்சி நடந்துவருகிறதோ அவற்றைச் சோவியத் ஆலோசனைகள் கிளப்பிவிடுவதாயிருந்தன. இச் சங்கடங்களைப் பிரிட்டிஸ் சர்க்கார் சோவியத் சர்க்காருக்கு எடுத்துக் காண்பித்தார்கள்.

## சந்தேகம் வேண்டாம்

பிரிட்டிஷ் சர்க்கார் சில புதிய ஆலோசனைகளையும் தெரிவித்தார்கள். பிரிட்டனும், பிரான்சும் தங்களுடைய பாதுகாப்பு உறுதிமொழிகளை நிறைவேற்றினாலும் நிறைவேற்றாவிட்டாலும் சோவியத் சர்க்காருக்குச் சிறிதும் கிடையாதென்று ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப்பட்டது. பிரிட்டனும் பிரான்சும் பாதுகாப்பு உறுதிமொழியை நிறைவேற்றுவதானால்தான் ருஷ்யாவும் நிறைவேற்றுமென்று சோவியத் சர்க்கார் கூறினால் பிரிட்டிஷ் சர்க்கார் அதற்கும் ஆட்சேபனை கூறமாட்டார்கள்.”

## ஹாலிபாக்ஸ் உறுதிமொழி

அந்நியநாட்டு மந்திரி ஹாலிபாக்ஸ் பிரபு லண்டனிலுள்ள சோவியத் ஸ்தானீகர் மான்ஷியர் மெயிஸ்கியைச் சந்தித்துப் பேசினார். பிரிட்டிஷ் சர்க்காரின் ஆலோசனைப்படி நடந்தால் பிரிட்டனும் பிரான்சும் உதவிக்கு வராமலேயே சோவியத் ருஷ்யா யுத்தத்தில் இறங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாமென்றும் இவ்விஷயத்தைச் சோவியத் சர்க்கார் தெளிவாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறார்களென்றும் மெயிஸ்கி அறிவித்தார். அத்தகைய நோக்கத்துடன் பிரிட்டிஷ் சர்க்கார் ஆலோசனை கூறவில்லையென்றால், சந்தேகத்திற்கு காரணங்களைத் தெரிவித்தால், உடன் அவற்றை நீக்கிவிடலாமென்றும் ஹாலிபாக்ஸ் பிரபு உறுதிகூறினார்.

ஹாலிபாக்ஸ்பிரபு காமன்ஸ் சபையில் பின்வருமாறு அறிவித்தார்:

“மாஸ்கோவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் இரண்டு தினங்களுக்கு முன்னர் சோவியத் அந்நியநாட்டு மந்திரி மான்ஷியர் மோலட்டோவைச் சந்தித்துப் பேசினார். பிரிட்டிஷ் ஆலோசனைகளைச் சோவியத் சர்க்கார் தீரப் பரிசீலனைசெய்து வருவதாக மோலட்டோவ் உறுதிகூறினார். நாங்கள் இப்பொழுது சோவியத் சர்க்காரின் மறுமொழியை எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறோம். அவர்களுடைய மறுமொழியைப்பார்த்துத்தான் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள முடியும். சோவியத் சர்க்காருடன் நடத்திவரும் சமரசப் பேச்சுகளை மிகவும் முக்கியமானதாகவும் அவசரமாகவும் பிரிட்டிஷ் சர்க்கார் கருதிவருகிறார்கள்.

(வீ-ரி)

## திரிகோணமலையில் விமான நிலையம்

சீனக்குடாவிற்குச் சமீபமாயுள்ள விசாலமான தரையில் கடற்படையார் தற்சமயம் ஏராளமான பணச்செலவில் ஓர் பெரிய ஆகாயவிமானநிலயம் கட்டிமுடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். விமானநிலயம் இன்னும் இரு மாதங்களுள் கட்டிமுடிந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## கழனிநதி பிரவாகம் குறைந்துவிட்டது

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

மங்களிலெல்லாம் ஓரே வெள்ளக்காடாகவிருக்கிறது சிலவிடங்களிலெல்லாம் 10 அடி வரை பெருகிவிட்டது. வீடுகள் பல வெள்ளத்தில்மூழ்கிக் கிடக்கின்றன. வெள்ளக்கஷ்டத்திற் காளாயிருக்கும் சனங்களுக்கு கஷ்டநிவாரணமளிக்கும் வேலையில், இத்தொகுதியின் அரசாங்கசபைப் பிரதிநிதியாகிய திரு. சுசந்தா டி பொன்சேகா மிகுந்த சிரத்தையெடுத்துக்கொண்டிருக்கிறார். நதியில் வெள்ளம் அதிகரித்துக்கொண்டுதானிருக்கின்றது.

## பதுளையில் பிரவாகம்

சென்ற 8உ முதல் இரண்டு மூன்று தினங்களாக நகரிலும் மற்றும் சுற்றுவட்டாரங்களிலும் கனத்தமழை இடைவிடாமல் பெய்துவந்தபடியால் நதியில் பிரவாகமேற்பட்டுவிட்டது. மூன்றுதினங்களுக்குமுன் மரணமடைந்தவோர் வாலிபரின் பிரேதம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

# நள்ளிரவிற் கள்வரின் கொடுமை

தானுத னுதந்த நானு — தந்த

1 கள்வர்க ளிங்கிந்தக் காலம்—எங்கும்
கலங்கிடச் செய்கிறார் கற்றோரைத் தாமும்
விள்ளருந் தீமை விளைக்கும்—இந்த
வீணரை நீக்கிடத் தீர்மானஞ் செய்யும்.

2 ஆயுத மணிந்த படியே—கள்வர்
அர்த்தசா மத்திலே வீடுக ளுக்குப்
போயங்கு செய்திடும் கொள்ளை—தன்னை
புத்தியாய்த் தடுத்திட லவசிய மன்றோ.

3 முன்னொரு போதுமில் லாத—கொள்ளை
மூத்தோரா யுள்ளோர்கள் கேட்டுத் திகைக்க
இந்நாளிற் குடித்து வெறித்துக்—கள்வர்
இயற்றிடு கின்றனர் ஏங்கிடச் சனங்கள்.

4 களவினுக் காகத்தூர்க் கொலையும்—கள்வர்
காரிருள் தன்னிலே செய்திடு வதனை
இளவாலை மூக்கொலை தன்னால்—இங்கு
எவரு மறிந்துமே ஏக்கமுற் றிட்டார்.

5 அரசாட்சி யாரிங் குடனே—இந்த
அனர்த்தத்தை முற்றாக நீக்கிட வேண்டும்
பராமுக மாக விருந்தால்—பலர்
பதைத்திடத் தக்க பழிகள் நிகழும்.

6 கற்றநல் வாலிபர் சேர்ந்து—இந்தக்
காவாலித் தனமான கள்வரைப் பிடிக்கப்
பற்றின்றித் தொண்டுகள் செய்யும்—பான்மை
பார்த்துமே மற்றோரும் புரியலாம் தொண்டு.

7 இராப்பத்து மணியதன் பின்பு—றோட்டால்
எந்தச் சந்தேகம் விளைக்கு மிரதமும்
வராதொழிந் திடத்தக்க வாறு—இவர்
வழிமறித் திடுவது மாண்புறு செய்கை.

8 இப்படி யிவர்செய்யும் போது—நாமும்
ஏற்றநல் லூக்கத்தைக் கொடுக்கின்ற சேவை
தப்பாது செய்திடில் நன்மை—பல
சந்தத மெம்மூர்க்குச் சார்ந்திடு மன்றோ.

9 பொலிசா ருடன்தலைமைக் காரர்—செய்யும்
போலிச் செயல்களால் பொருந்திடும் தீமை
கலைமிகும் பெரியோ ரிதனைக்—கண்டும்
கவன மெடுக்கா திருத்தல் தகுமோ.

10 நகையணிந் திருக்கின்ற பெண்கள்—இந்த
நாட்களிற் கலக்கத்தோ டிருக்கின்ற காட்சி
பகைவ ரெமக்கிந்தக் கள்வர்—என்ற
பகரரு முண்மையைப் புகல்வது போலும்.

11 கள்வரைத் தான்பிடித் தாலும்—சாட்சி
கற்றநற் கண்ணிய முள்ளவர் தாமும்
உள்ளத்திற் தைரியத் தோடு—கோட்டில்
உரைத்திட மறுக்கிறார் உண்மையீ தன்றோ.

12 தேசாபி மானம் திகழும்—நல்ல
தீரர் பலரைநாம் தேடியே சேர்த்துப்
பாசாங்கு சற்றுமிங் கின்றிக்—கள்வர்
பலரையும் பிடித்துமே யடைத்திடல் வேண்டும்.

13 உயிரையோர் திரணமா யெண்ணும்—பல
உத்தம வாலிபர் முன்வர வேண்டும்
அயராதிங் கவர்க ளுழைத்தால்—எல்லா
அனர்த்தமும் நாட்டைவிட் டகலுமிங் கன்றோ.

14 ஓட்டினைப் பிரித்துள் ளிறங்கி—வீட்டில்
உள்ள பொருட்களைக் கொள்ளை செய்கின்ற
காட்டு மிராண்டிகள் போன்ற—கள்வர்
கலங்கிடச் செய்திடல் கற்றோர் கடனே.

15 மதுபானம் நீக்கிட வேண்டும்—மாந்தர்
மனவமை திக்கிது மறுக்கொணாத் தேவை
புதுமுறைக் களவுகட் கெல்லாம்—மது
போதிய சாதன மென்பது பொய்யோ.

16 மரவரி வேண்டா மெமக்கு—எங்கள்
மானத்தைக் காத்திடி லதைநீக்க வேண்டும்
அரசாட்சி யாருக்கு நாமும்—இந்த
அபிப்பிரா யத்தை அறிவித்தல் வேண்டும்.

17 கூட்டமாய்க் கூடியே கள்வர்—கெட்ட
கொடுமைகள் பலவற்றைக் கூச்சமில் லாதே
நாட்டினிற் செய்வதைக் கண்டும்—நாங்கள்
நகைத்துக்கொண் டிருந்திடல் நலமோநீர் சாற்றும்

18 வீட்டினி லாறுத லில்லை—எந்த
வீரரு மேங்கிக் கலங்கிடு கின்றார்
கூட்டங்கட் கிரவினிற் போக—எம்மால்
கூடாதிங் கென்பது யாரு மறிவர்.

19 பெருமூச் சுடன்பெருந் துக்கம்—எம்மைப்
பீடித் திருப்பதைப் பெரிது முணர்ந்து
பெருமைசேர் வீரத்தோ டிங்கு—என்றும்
பெருஞ்சேவை செய்துநற் பேற்றினைப் பெறலாம்.

20 இடைக்கிடை பொலீஸ்மாரை மாற்றி—வேறு
ஏற்றநற் பொலிசைநாம் இவ்விடத் தெடுத்துப்
படைக்கலம் வந்தது பாரும்—என்று
பயந்திடக் கள்வரைச் செய்திடல் வேண்டும்.

21 தரணிமா ரோடப்புக் காத்து—மாலைத்
தகாததூர்க் கள்வர்க்காய் வாதாட வேண்டாம்
பார்சுகம் விரும்பிடு மென்று—நாம்
பகர்ந்திட லவசியம் என்பதைத் தேரும்.

22 ஒன்பது மணிக்குப்பின் இரவில்—ரோக்கீஸ்
ஒருபோதும் வைத்திட லாகாதிங் கென்று
மன்பதை வாழ்ந்திடு தற்காய்—நாமும்
மாண்புடன் அரசாட்சி யாரையே கேட்போம்.

23 சென்ற சனிவாரத் தன்று—கூடிச்
சீர்மிகு மத்திய கல்லூரி தன்னில்
வென்றிடலா மிந்தக் கொடுமை—என்று
விளம்பினர் பெரியோரும் வீண்பேச்சி தன்று.

24 சனங்களால் முடியாத துண்டோ—எல்லாத்
தகாத செயலையும் ஒற்றுமை நாடும்
மனமுள்ள பெரியோர்கள் சேர்ந்தால்—எந்த
மாந்தரும் வருந்தாதே நீங்கலா மன்றோ.

25 ஈஸ்வர தியானத்தா லென்றும்—இந்த
ஈனச் செயல்செய்யும் கள்வரை நீக்கித்
தேசுறு மாந்தரா யிங்கே—அருள்
சீருடன் பெற்றுநாம் திகழ்ந்திட லாமே.

26 நல்லோர்கள் என்றுமே வாழ்க—நாட்டில்
நன்மை புரிந்திடும் வாலிபர் கட்குத்
துல்லிப மாகநற் றொண்டு—செய்யும்
தூயோரிங் கெல்லோரும் நீடூழி வாழ்க.

K. C.

## சந்திரனும்செடிவளர்ச்சியும்

தாவரங்களினுடைய வளர்ச்சிக்கும் அல்லது விதைகள் முளைப்பதற்கும் சந்திரனுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? மிஸஸ் யல் கொலிஸ்கோ என்ற பெண் விஞ்ஞானி இதுபற்றி தாம் ஆராய்ந்தறிந்த உண்மைகளைத் தமது புத்தகத்தில் வெளியிட்டுள்ளார். இதர நிலைமைகளெல்லாம் சரியாக இருந்தால் பௌர்ணமிக்கு இரண்டு நாட்களுக்குமுன் ஊன்றப்படும் விதைகள் மிக அதிகமான பலனைத் தருகின்றன. சில அதிக விளைவும் தருகின்றன. உலகில் பல விவசாயிகளும் இவ்வுண்மையைப் பரீட்சித்து நன்மை அடைந்துள்ளனராம். இந்தியாவுக்கும் இது பொருத்தமாக இருக்கிறதாக ஸ்ரீ டாட்வல் தெரிவித்திருக்கிறார்.

## பச்சைநிற முட்டை

சாதாரணக் கோழி முட்டைகள்தான். முட்டையின் ஓட்டிற்குச் சாயம் பூசுகிறார்கள் என எண்ணவேண்டாம். ஓட்டிற்குள் இருக்கும் கருதான் பச்சைவர்ணம். சாதாரண வெள்ளைநிறந்தான். இந்த மாதிரி பச்சை வர்ணக் கருவுள்ள முட்டைகள் அமெரிக்காவில் சர்வ சாதாரணமாக உபயோகிக்கின்றார்கள். யாரோ ஒருவர் ஒருசாதனத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். கோழியின் தீனியோடு அதையுஞ் சேர்த்துக்கொடுத்தால், அது இடும் முட்டைகளிலெல்லாம் மஞ்சள் நிறம் கரும்பச்சை நிறமாக இருக்கிறதாம்.

## சதுரமுட்டைகள்

பச்சைநிற முட்டைகளை இந்தச் சதுர முட்டைகள் தோற்கடித்துவிட்டன. அமெரிக்க விவசாய இலாகாவிலுள்ள நிபுணர்கள் சதுர முட்டைகளிடும்படி செய்யலாமா என்ற ஆராய்ச்சியி லீடுபட்டிருக்கிறார்கள். சாதாரண வடிவத்திலுள்ள முட்டைகளை அடுக்கிவைக்க முடியாது; பல உடைந்துபோகின்றன. சதுரமாக இருந்தால் அடுக்குவதும் சுலபம்; சேதமும் குறைவு. கோழியின் ஆகாரத்தில் சுண்ணாம்புச் சத்து அதிகம் இராதபடி பார்த்துக்கொண்டால் முட்டைகள் அநேகமாக ஓடில்லாமலே வெளிவரும். மேல்தோலைக் கடினமாக்கும் மருந்தைப்பூசி, சதுர அச்சுக்குள் வைத்து அழுத்தினால், முட்டை சதுர வடிவமாயமைந்துவிடுமென இவர்கள் நம்புகிறார்கள்.

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று போற்றினும் பொத்துப் படும்.

# பெரியபுராணப் பெரியோர்

## திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரம்

ஏழாலை திரு. சே. சின்னத்துரை ஆசிரியர் அவர்கள்

திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு நஞ்சு கலந்துகொடுத்தும் அவர் இறக்காயலிருந்ததை அறிந்த சமணர்கள் அதிக துக்கங்கொண்டு இனிச் செய்வது என்னவென்று ஆலோசிக்கலானார்கள். அவருக்கெதிரே கோபம் பொருந்திய யானையை எதிரே விடுவதுதான் உசிதமென நினைத்தார்கள். அங்ஙனமே ஒரு யானையை அவர்கள் விட்டார்கள். அது கூடத்தையும் மாடத்தையும் குத்திப் புறப்பட்டுத் தெருவீதியில்வந்து அப்பொழுது திருநாவுக்கரசருக்கெதிராகச் செல்லும்படியாகத் தூண்டினார்கள். அப்பர் சுவாமிகள் யானைவருவதைக் கண்டு "சுண்ண வெண்சந்தனச் சாந்து" என்ற சொற்களை முதலாகவுடைய தேவாரத்தை அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதும் இல்லையென்று உறுதிகூறிப் பாடி முடித்தார். யானை அப்பர் சுவாமிகளை வலம்வந்து தாழ்ந்து வணங்கி எழுந்தது. ஆனால் அவ்யானை பாகர்களை தொடர்ந்து செல்ல அவர்கள் அப்பர் சுவாமிகள்மேல் சுட்டிக்காட்டி எதிர்க்கும்படியாக ஏவினார்கள். ஆனால் அது சமணர்மேல் ஓடி எதிர்த்துச்சென்றது. ஓடி ஓடிச்சென்று சமணர்களை மிதித்துப் பிளந்து நாடினவர்களைக் கொன்று நகரத்தார்க்குப்பெரும் கலகத்தைக் கொடுத்தது. யானையினாலும் இறக்கப்படாததைக் கண்ட சமணர்கள் அப்பர்சுவாமிகளைக் கடலுள் கல்லுடன் கட்டிப் போடுவதே உசிதமெனத் தீர்மானித்து அப்படியே செய்தார்கள். அச்சமயத்தில் எத்தன்மையாகுதல் வருக என்று பெருந்துணிவு கொண்டவராகிய அப்பர் பெருமான் சிவபெருமானின் திவ்விய பஞ்சாக்கரத்தின் பெருமையைக் குறிக்கின்றதாகிய "சொற்றுணை வேதியன் சோதி வானவன்" என்ற சொற்களை முதலாகவுடைய நமச்சிவாய பதிகத்தைப் பாடினார். அச்சமயத்தில் கல்லானது அமிழ்ந்து அப்பெருங் கல்லின்மேல் ஆண்ட அரசாகிய அப்பர் சுவாமிகள் விளங்கித் தோன்றினார். பிறவியாகிய கடலை நீந்தச் செய்யக்கூடிய ஸ்ரீ பஞ்சாக்கரமென்றால் அக்கடலானது அம்மெய்ப்பெருந் தொண்டரை கல்லின்மேல் ஏற்றுதல் ஒரு அதிசயமாகவிராது. வருணபகவானும் அப்பெருமானைத் தாங்கிக் கரையேற்றுவதற்கு முன்பு தவஞ்செய்தனன். கல்லாகிய சிவிகையின் கண்ணே அப்பர் பெருமான் ஏறி சென்று திருப்பாதிரிப் புலியூர் முன்பாக அடைந்தார். அப்பொழுது மெய்த்தவர்கள் அரகர என்று சொல்லி ஆவாரித்தார்கள். அப்பர் பெருமான் "ஈன்றாளுமா யெனக் கெந்தையுமாகி" என்ற சொற்களை முதலாகக் கொண்டு ஓர்அரிய தேவாரத்திருப்பதிகம் பாடினார் திருவதிகைக்குப் பின் அப்பர் சுவாமிகள் சென்றார். திருவதிகைவாசிகள் அவரைக்கண்ட மாத்திரத்தில் அதிக சிறப்புடன் வரவேற்றார்கள். திருவதிகை வீதியுள்ளே அவர் சென்றதைக் குறித்துச் சேக்கிழார் பெருமான் கூறுவது கவனிக்கத்தக்கது.

"தூயவெண்ணீறு துதைந்தபொன்மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொன்
மேய செவ்வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே."

அப்பர் சுவாமிகள் சிவபெருமானை வணங்கித் தேவாரத் திருப்பதிகம் பாடினார். பல்லவராசனும் தன்னுடைய பழவினைப்பாசம் நீங்க சைவசமயத்தைச் சார்ந்தான். அரசன் சமண பள்ளிகளை இடித்து குணதரவீச்சரம் என்ற ஓர் சிவாலயத்தைக் கட்டினான். சிவபெருமான் எழுந்தருளி யிருக்கின்ற பல சிவஸ்தலங்களை வணங்கிப் பின் திருத்தூங்கானை மாடத்தை வந்து அடைந்தார். அங்கு அப்பர் பெருமான்தன்னுடைய இலச்சினை யிட்டருளிப்படியாகச் சிவபெருமானை வேண்டினார். "பொன்னார் நத்திருவடி" என்ற சொற்களை முதலாகக்கொண்டு ஓர் தேவாரத் திருப்பதிகம் பாடினார். அச்சமயத்தில் ஓர் சிவபூதம் ஒருவருமறியாமல் மூவிலைச் சூலத்தைச்சினவிடையுடன் சாத்தியது. தமது தோள்களின்மேல் இலச்சினையிருப்பதை அறிந்த அப்பர் சுவாமிகள் திருவருளைவியந்து மனங்களித்துக் கண்களில் அருவிசொரியப் பெருமானை வணங்கினார். பின் குணதிசையிலுள்ள சிவாலயங்களை வணங்கிச் சிதம்பரத்தை அடைந்தார். பல அடியார்கள் எதிர்கொளச் சிவம்நிலவிய சிதம்பரத் திருவீதியை அடைந்தார். கைகளைச் சிரசில் குவியவும், கண்களில் கண்ணீர் சொரியவும் நான்கு கரணங்களும் ஒருமைப்பாடு அடையவும், உலகத்திலுள்ள ஆன்ம கோடிகள் உய்யும்பொருட்டாகக் கனகசபையில்நின்று திருநிருத்தம் செய்கின்ற நடராசப்பெருமானுடைய சந்நிதானத்திற்கு நேராகச் சென்றார். ஆனந்தமேலீட்டினாலே "பத்தனுப் பாடமாட்டேன்" என்ற சொற்களை முதற்கொண்டு ஓர் தேவாரம் பாடினார். நடராசப் பெருமானுடைய முகத்தின் ஆனந்த நோக்கைப்பார்த்து அப்பர் சுவாமிகள் ஓர் தேவாரத்தின் இறுதியில் கூறுவது நினைக்கத்தக்கது.

"தில்லையுட். சிற்றப்பலத்து நட்டம் என்று வந்தாயெனும் திருக்குறிப்பே." என்று கூறுகிறார். சில நாட்கள் திருத்தொண்டுசெய்தபின் திருக்கழிப்பாலைக்குச் சென்றார். அங்கு தங்கி மீண்டும் சிதம்பரத்துக்குவந்து "அரியானை அந்தணர்தம் சிந்தையானை" என்ற சொற்களை முதலாகவுடைய தேவாரத்தைப் பாடினார்.

கதைப்பகுதி

# சுந்தரன்செய்த தந்திரம்

(முன்தொடர்ச்சி)

சேவகரில் நாலுபேர் விருந்துடனும் துப்பாக்கி முதலிய ஆயுதங்களுடனும் சென்று கந்தரின் தம்பி ஐயாத்துரையின் உதவியுடன் புத்தகலட்டிக்குப்போய் முதல் கோணனைப்பிடித்துக் கைவிலங்குமாட்டி அனுப்பிவிட்டார்கள். மருதனுக்கு அச்சங்கதிதெரிந்தவுடனே ஓடி ஒழித்துவிட்டான். சேவகர் எங்குந்தேடியுங் காணப்படாமல் ஈற்றில் ஓர் பனை அடைப்புக்குள் இரண்டுபனையின் ஓலைகளையுஞ் சேர்த்து முடிந்து படுத்திருக்கக் கண்டார்கள். கண்டவுடனே இறங்கி வரும்படி பயமுறுத்தியும் அவன் அசையவில்லை பின்பு துவக்கைக்காட்டிச் சுடுவோமென்னவே பயந்து கீழே இறங்கிவந்தான். அவனுக்கும் விலங்குமாட்டிக் கூட்டிப்போனார்கள். அன்று அவர்களை வெவ்வேறு அறையில் அடைத்துவைத்துச் சேவகர் வெருட்டி உருட்டி நடந்த சங்கதியை அவர்கள் வாயால் அறிந்துகொண்டார்கள். மறுநாள் நீதிபதிமுன் கொண்டுவரப்படவே முதல் கோணன் கூப்பிடப்பட்டான். நீ உன்னில் ஏற்பட்ட கொலைக்குற்றத்தைப்பற்றி என்ன சொல்லுகிறாய் என்று நீதிபதிகேட்டார். அவனோ ஆண்டவரே தள்ளிவிழுத்தினவன் மருதன்தான்; நான் அவனுக்கு உதவியாயிருந்த குற்றமேயன்றி வேறொருகுற்றமுஞ் செய்யவில்லை என்றான். மருதனைக் கூப்பிட்டபோது நாங்கள் மூவருங் கள்ளுக்குடித்தோம்; வெறியில் நடந்தகருமம் என்னவென்று நானறியேன் என்றான். நீதிபதி அவர்களை விளக்கமறியலில் அடைத்துவிட்டு முன் கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டு விளக்கமறியலில் அடைக்கப்பட்டிருந்த கார்த்திகேசுவை அழைப்பித்து விடுதலை செய்துவிட்டார். பின்பு கந்தரையும் ஆயிரம் இறைசால் பிணையில் போகும்படியும் கூடினால் மேலொப்பனை விடும்படியுங் கற்பித்தார். கந்தருக்காக அனேகர் வந்துநின்றமையால் உடனே பிணைகொடுத்து வெளிப்பட்டுவிட்டார்.

## தூக்குத் தீர்ப்பு

பிணையில் வெளிப்பட்டுவந்த கந்தர் மருதனும் கோணனும் குறித்த நாளில் ஓடிப்போனதைக் கண்டதற்கு ஒருசாட்சியும். இருவரும் புத்தகலட்டியில் ஒருவர்க்கொருவர் இவ்விஷயமாய்ச் சள்ளுப்பிடித்ததற்கு ஒருசாட்சியும் ஆயத்தஞ்செய்துகோட்டுக்குப்போய்ச்சாட்சிக்கட்டளைஎடுத்துவிட்டார்.குறித்ததினத்தில் மறுபடியும் இவ்வழக்கு ஆரம்பித்தது. அரசாட்சி நியாய துரந்தார் கோணனைத் தனியே அழைத்துப்போய்ச் சிலகிமிஷம் பேசிவிட்டுவந்து நீதிபதியை நோக்கி நான் கோணனை முடிக்குரிய சாட்சியாய் எடுத்து எதிரியினின்று விலக்கப்போகிறேனென்று சொன்னார். நீதிபதியும் உடன்பட்டமையால் அப்படியே கோணன் முடிக்குரிய சாட்சியாய்க் கூப்பிடப்பட்டான். அத்தருணம் கோணன் நடந்த சங்கதிகளையெல்லாம் ஒன்றுமொழியாமற் சொல்லிவிட்டான் கந்தர் எடுத்த புதிய சாட்சிகளும் வந்து, ஒருவன் அன்று இரண்டு பள்ளரும் ஓடிப்போனதையும், மற்றவன் நீதான் கொன்றாயென்று ஒருவனை மற்றவன் குற்றம் பாரித்ததையும் அவன் சீலைகளையும் காசையும் ஏன் எறிந்தாயென்றும் நீதான் அந்த நட்டமிறுக்கவேண்டுமென்றும் இருவரும் பேசுப்பட்டு அடிபட்ட சங்கதிகளையுஞ் சொன்னார்கள். நீதிபதி மருதனை மறியல்வீட்டுக்கு அனுப்பிவிட்டு மற்றவனைப் பிணையில்விட்டார். பின்பு விளக்கப்புஸ்தகம் மேலான அரசாட்சி நியாயதுரந்தாருக்கு அனுப்பப்படவே அவர் பார்வையிட்டபின் மேற்கோட்டுக்குப் பாரப்படுத்தி விட்டார். மேற்கோட்டில் ஓர் குறித்ததினத்தில் மத்தியஸ்தர் சமுகத்தில் நியாயவிசாரணைசெய்து கோணனுக்கு ஆறுமாசச்சிறையும் மருதனை அடுத்தமாசம் முதலாந்திகதி தூக்கிக் கொல்லும்படியுந் தீர்ந்தது. அந்த நாள்வரவே யாழ்ப்பாணத்தின் நாலா திசைகளிலுமிருந்து சனங்கள் கும்புகும்பாய்வந்து தூக்குமரக்காட்டில் வேடிக்கைபார்க்க நின்றார்கள். அவ்வேளை சுந்தரனும் வந்து ஒரு முடக்கிற் குந்திக்கொண்டிருந்து சங்கதிகளை விசாரித்துக்கொண்டிருந்தான். அப்போது மருதன் விலங்குடன் கொண்டுவரப்பட்டுத் தூக்குமரத்தின்மேலேற்றப்பட்டான். அத்தருணம் அவனைநோக்கி அதிகாரி நீ மரிக்குமுன் ஏதுஞ் சொல்லவேண்டியிருந்தால் சொல்லென்றார். அதைக்கேட்ட மருதன் இந்தக்கொலையை நானல்ல என் கள்ளு வெறியே செய்தது. கூடக்குடித்துக் கூடக்கொலைபுரிந்த கோணன் "நம்பவைத்துக் கழுத்தறுத்துவிட்டான்." அவனுக்கும் ஒருநாள் இக்கதிவரும். கமக்காரமாரே, என்கூட்டாளிகளே "குடிகேடு" என்பதை உணருங்கள். அறிவை மயக்கும் நஞ்சைக்குடித்து மோசம்போகவேண்டாம் என்று உங்களைக்கும்பிடுகிறேன். இதுவே என் கடைசிச்சொல் என்றான். உடனே சேவகர் அவன் கழுத்தில் கயிற்றைமாட்டி மிதிபலகையைத் தட்டிவிட்டார்கள். உடனே கயிறிறுகித் துடித்துப் பதைத்துச் செத்தான். அங்கிருந்தோர் குடியின் பலாபலனையுணர்ந்தவர்களாய் வீடுசென்றார்கள். சுந்தரனோ ஆழ்ந்து சிந்திக்கலானான். இது நடந்த தேதியையும் காரியத்தையும் பார்த்தால் இதில் நானும் சம்பந்தப்பட்டிருக்கிறேனென்று விளங்குகிறது. நான் நிலாவரையில வீழ்ந்த அன்றே இவனுங் கொலைசெய்ததாயிருக்கிறது. விசாரணையினால் என்னைத் தூரத்தி வந்தவர்கள் என்னால் சங்கடப்பட்டார்போல விளங்குகிறது. இனி அந்தப்பக்கத்துக்குப் போனால் "பலநாட்டிருடன் ஒருநாள் அகப்பட்டதுபோல" நான் மாட்டிக்கொள்ளவும் நேரிடும், இனி இவ்வித தந்திரப் பிழைப்பைவிட்டு வேறு தந்திரமேதுஞ் செய்வதே புத்தியென்று சிந்தித்துக் கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தான்.

## சுந்தரனின் நவீன புத்தி

அந்தச் சம்பவத்தைப் பார்த்திருந்தபின் வீடுசென்ற சுந்தரனுக்குச் சிந்தனைவேறாகி எந்தன்பேர் சந்தியெங்கும் பரவிவிட்டதால் இந்தப் பிழைப்பைவிட்டு வேறு தந்திரஞ்செய்வதே புத்தியென்று சிந்திக்கலானான். அந்தவேளையில் வந்ததையா அவனுக்கோர் யோசனை. நான் கொண்டுவந்த பொருட்களில் அதிகப்பங்கு வீணாய்ச் செலவாயின. "தான் தேடாப் பொன்னுக்கு மாற்றுமில்லை உரையுமில்லை" என்றபடி கண்டமட்டிற் குடித்து வெறித்தும் கூட்டாளிகளுக்குக் கொடுத்தும் துர்வியாபாரத்திலுஞ் செலவிட்டேன். இனி மீந்திருக்கும் அற்பபொருள் எத்தனைநாளுக்குக்காணும். நான் சிறுபராயமுதல் தந்திரப்பிழைப்பிலேயே காலந்தள்ளிவிட்டேன். இனிக் கொத்துவேனோ? வெட்டுவேனோ? கூலிவேலை செய்வேனோ? ஒன்றும் நம்மால்மாளாது. எனக்கு வலிமை இல்லாவிடினும் வாயிருக்கிறது. மந்திரமில்லாவிடினும் தந்திரமிருக்கிறது. "வாயுள்ளபிள்ளை பிழைக்கும்" என்று பெரியோர்களுங் கூறினார்களே. "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்பார்களே! இந்தப் பெரிய படித்த மனுடரையெல்லாம் மயக்கியநான் சாதாரண சனங்களையும் மயக்கிப் பொருளீட்டவியலாதா? "ஐந்தும் மூன்றுமுண்டானால் அறியாதபிள்ளையும் கறியாக்குவாள்" அல்லவா?

(தொடரும்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், வயாவிளான் திரு. சி. நல்லதம்பி என்பவரால் மேற்படியூர் "கோதைப்பிள்ளைசீமா" விலுள்ள ஆனந்தகுமாரன் அச்சியந்திரசாலையில் 1938-ம் வருஷம் மார்கழிமீ 15-ந்திகதி வியாழக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.